

Remembrance in memory of

**Late Mrs. Kanagamma Tharmalingam**

பொலிகண்டியை பிறப்பிடமாகவும் திருகோணமலையை வதிவிடமாகவும்
கொண்ட அதிஉயர் சைவ வேளாளர்

**அமரர். திருமதி.கனகம்மா தர்மலிங்கம்**
**அவர்களின்**

# 31ம் நாள் நினைவு மலர்

**06.06.2012**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

அன்போடும், பண்போடும்

அரவணைத்து எமைக்காத்து

நேர்மை பொறுமை யென

மானுட வழியெமக்குக் காட்டி

துன்பம் துயர் தாங்கி தூயவராய்

வளர்ந்து வாழ

நல்வழிகள் பல காட்டி

எல்லோரும் துடிதுடித்தழ

விநாயகரடி விரைந்து சேர்ந்த

எங்கள் அன்பு தாய்க்கு

இந்நூல் சமர்ப்பணம்

- குடும்பத்தினர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர்

# திருமதி. தர்மலிங்கம் கனகம்மா

மண்ணில்
04.10.1932

விண்ணில்
07.05.2012

## நினைவறிப்பா

'சீர் பெருகுநந்தன வருட சித்திரையில்
தீராத பிரதமைத் திதிதனில் – பேறாரு
பெற்ற சீமாட்டி கனகம்மா விநாயகரடி
உற்றவரும் கலங்க எகினார் காண்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பஞ்சபுராணம்



## தேவாரம்

உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள் மழலைமுழ வதிர
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ணம் அறுமே

## திருவாசகம்

தொண்டர்காள் தூசிசெல்லீர் பக்தர்காள் சூழப்போகீர்
ஒண்திறள் யோகிகளே பேரணி யுந்தீர்கள்
திண்திறள் சித்தர்களே கடைக்கூழை செல்மின்கள்
அண்டர்நா டாள்வோம்யாம் அல்லற்படை வாராமே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியை கரையிலா கருணைமா கடலை
மற்றவரறியா மாணிக்க மலையை மதிப்பவர் மனமணி விளக்கை
செற்றவர் புரங்கள் செற்ற எம் சிவனைத்திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு உள்ளம் குளிரஎன் கண்கள் குளிர்ந் தனவே

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிட பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன் மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்சிற்றம்பலமே இடமாக
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

உலகலாமுணர்ந்து ஓதுதற்கரியவன்
நிலவுலாவியன் நீர்மலிவேணியன்
அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அமரர். திருமதி. கனகம்மா தர்மலிங்கம்
## அவர்களின்
# வாழ்க்கை வரலாறு

சைவமும் தமிழும் தழைத்தினிதோங்கி தமிழீழத்தின் வடமராட்சி வதிரியைப் பிறப்பிடமாகவும். கொண்ட தம்பு தம்பதிகளின் மகன் முருகேசுக்கும் பொலிகண்டி உப்புக்கிணற்றடி பிள்ளையார் கோவிலடி அம்மையார் வளவில் உயர் சைவ வேளாளர் சிதம்பரிப்பிள்ளை வழித்தோன்றலில் முருகேசு தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் மகள் இராசம்மாவிற்கு கனகம்மா (பவளக்கொடி) ஆண்டு 1932 ஐப்பசி 04 ஆம் திகதி பூவுலகில் அவதரித்தார். இவர் வடமராட்சி நெல்லியடி வதிரி அரசடி மெதடிஸ் தமிழ் கலவன் பாடசாலையில் கல்விகற்று சீரும் சிறப்புடனும் வளர்ந்து மங்கைப்பருவத்தில். கல்வியில் சிறந்தார்.

"இல்லறமல்லது நல்லறமல்ல" என்ற மூத்தோர் வார்த்தைக்கேற்ப வதிரியூர் உயர் சைவவேளாளர் குல கந்தவனம் வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் மூத்தமகன் கந்தவனம் தர்மலிங்கம் அவர்களை 1950 ஆண்டு திருமணம் முடித்து இல்லற வாழ்வின் பயனாக இறைவன் திருவருளால் மூன்று ஆண் குழந்தைகளும் இரண்டு பெண் குழந்தைகளையும் பெற்றெடுத்தார்.

அமரர் நவரட்ணராஜா, மகேந்திர நாதன் (தவராஜா), இந்திராணி,தவமலர்,தவலிங்கம் என்னும் ஐவரையும் மக்கள் செல்வங்களாக பெற்று அகமகிழ்ந்தார்.இவரது கணவர் திருகோணமலை துறைமுக அதிகார சபையில் கடமையாற்றினார்.

பாசமுள்ள உடன் பிறப்பு சகோதரனாக முருகேசு மார்க்கண்டு, செல்லபாக்கியம் மார்க்கண்டு, சிவபாக்கியம் சின்னத்துரை, கந்தவனம் கணேசபிள்ளை ஆகியோரின் மைத்துணியுமாவார். உடன் பிறவாச் சகோதரன் செல்லத்துரை பரஞ்சோதி உடன்பிறவாச் சகோதரியாக சந்திரபூரணம் கிருஷ்ணப்பிள்ளை என்போராவர்.

எல்லோரிடமும் அன்பாக பழகியும், உளளொன்று வைத்து புறமொன்று பேசாக் குணமுடையவர். சகோதர பாசத்திற்கு ஓர்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எடுத்துக்காட்டாய் கோபம் கொண்ட கணவனுடன் பக்தாவிற்கு ஏற்ற பதிவிரதையாய், மாமியார் போற்றும் மருமகளாய் உறவென்றால் உள்ளன்புடன் உபசரிக்கும் பண்புடையவராய் சீரும் சிறப்புடனும் தனது இல்லற வாழ்க்கையில் இன்புற்றிருந்த வேளை, வேலைக்குச் சென்ற கணவனின் மார்படைப்புச் செய்தி செய்வதறியாது பதபதைத்து துடித்து நின்ற வேளை இரக்கமற்ற காலன் தனது பாசக்கயிற்றை வீசி கணவன் உயிரை பறித்துச் சென்றான்.

கண்ணைக்கட்டி காட்டில் விட்டது போல் நான்கு சின்னஞ்சிறு பிள்ளைகளுடன் செய்வதறியாது தத்தளித்தார். தன்வாழ்க்கை முடிந்து விட்டது தன் குழந்தைகள் நான்கையும் வளர்த்தெடுக்க வெளியுலகே தெரியாதிருந்தவர். தன்னுள் தன்னம்பிக்கையை வரவழைத்து நான்கு பிள்ளைகளுமே தனது உலகமென புதுவாழ்க்கையை தன்னந்தனியே ஆரம்பித்தார்.

நாட்கள் வாரங்களாக வாரங்கள்மாதங்களாக மாதங்கள் வருடங்கள் ஆகியது. ஆயிரம் உறவுகள் இருந்தென்ன ஆலமரமாய் கண்ணை இமைகாப்பது போல் தன்னலம் துறந்து இரவு பகல் என்று பாராது விழியோடு தூக்கம் மறந்து உதிரத்தை வியர்வையாக்கி ஒருவேளை சாப்பாட்டிற்கோ பென்சில் கொப்பிக்கோ யாரிடமும் கையேந்தாமல் கடைப்பண்டம் வாங்கினால் கண்டதெல்லாம் சமைப்பார்கள் என்று மூன்று வேளையும் அருசுவையுடன் அற்புதமாய் வகைவகையாய் சமைத்து வைத்து பாடசாலை சென்ற பிள்ளைகள் திரும்பிவரும்வரை காத்திருந்து உணவூட்டி சாப்பிடும் வரை காத்திருந்து இறுதியிலே தானுன்பார்.

பிள்ளைகள் தூக்கம் விழிக்கும் முன் மாட்டினிலே பால்கறந்து தனிப்பாலை சுண்டக் காய்ச்சி அரைத்தூக்கத்தில் இருக்கும் தனது குழந்தைகளுக்கு பருக்கிவிட்டு வாயலம்பி மீண்டும் தூங்கவைப்பார். பெண்குழந்தை அடுப்பில் வேலை செய்தால் உன்னழகு கெட்டுவிடுமென்று தன்னழகை தீயிட்டு எம்மழகை இரசித்தவர். மானம், மரியாதை தன்மானம் ஒன்று தான் எப்போதும் உயர்வானது என்று பள்ளி செல்லும் முன் அவர் சொல்லி அனுப்பும் மந்திரம்.

அர்த்தநாதீஸ்வரராய் வடிவெடுத்து குடும்பத்தை நடாத்தும் திட்டநிர்வாகியாகவும் கொள்கை வகுப்பதில் உபகாரியாகவும், ஆலோசனை சொல்வதில் மதிமிக்க மந்திரியாக, ஆசை மக்களை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடன் கண்டிப்புடனும் போற்றி , அறவழிகாட்டி கல்வி பெறவைத்து ஆசையோடு அரச பதவி பலவற்றைத் தேடித்தந்து ஆசிரியராய் சேலையணிந்து செல்லும் போது முன் செல்லவிட்டு பின்னின்று அழகுபார்த்து தான்பட்ட கஸ்ரத்தை ஆனந்தக் கண்ணீரால் கரைத்திட்டார்.

மருமக்களாக செல்வமணி, அமரர் மகாலிங்கம், வரதராஜா, கமலேஸ்வரி என்போரையும் பேரப்பிள்ளைகளாக சங்கீதா, தனுஷா, சர்மிளா ,நிஷாந்தன்,மயூரா,சஞ்சீவ்நாத் , மைதிலி, நிவேதிக்கா, கீதமி பிரசன்னாத், வைஷாலி ஆகியோரில் பாசத்தை சொரிந்தார். பூட்டப் பிள்ளைகளாக டினுஷிதன், கீர்த்தனன், ஹரிராம், அஸ்வினா, லக்ஷினி ஆகியோரை கண்டு மகிழ்ந்தார்.

தவமிருந்து பெற்றமகன் வன்னியிலே படும் கஸ்ரம் கேட்டவுடன் ஊண் இன்றி உறக்கமின்றி இரத்தக்கண்ணீர் வடித்தார். தன்னுயிர் போகு முன் தான் பெத்த மகனுயிரை காத்திட்டு இலண்டன் வரை பறக்க வைத்தார். தன்னுயிர் போகும் முன் மீண்டும் ஒருமுறை பார்ப்பேனா என்று தள்ளாடும் வயதினிலே இலண்டன் சென்று தன் மூத்தமகனை பார்த்து பூரித்துப் போயிருந்தார். பூரித்துப் போயிருந்த ஐந்தாறு மாதத்தில் தகப்பன் முகம் தெரியாத கடைக்குட்டி மகனின் மாரடைப்பு செய்திகேட்டு அனலில் பட்ட புழுவாய் துடித்து அடுத்தகணம் இலங்கை நோக்கி பறந்துவந்தார்.

தான்பெற்ற பிள்ளைகளுக்காய் அவர்பட்ட கஸ்ரங்கள் சொல்லில் அடங்கா மூத்தமகன் மாரடைப்பு அறுவைச் சிகிச்சையின் போது தங்க விநாயகனே நான் பெற்ற செல்ல மகனை இலண்டனுக்கு பறந்து சென்று காத்திடுவாய் என்று கண்ணீர்மல்க வேண்டிநின்றார்.மெழுகுவர்த்திபோல் உருகி , உருக்குலைவதையே இலட்சியமாக கொண்டு தகப்பனில்லாமல் எப்படி பிள்ளைகளை வளர்த்திருக்கிறார். என்று மற்றவர்கள் வியந்து போற்றும் அளவிற்கு உதாரணத்தாயாய், உத்தமியாய், கண்கண்ட தெய்வமாய் வாழ்ந்து எல்லோர் மனதிலும் நீங்கா இடம்பிடித்து மீளாத்துயிலில் ஆழ்ந்து விட்டார்.

**ஓம் சாந்தி ................சாந்தி................சாந்தி.**

**– குடும்பத்தினர் –**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசை அப்பாச்சி



உம் இளைய தனயனின் 3 இதழ்கள் நாங்கள்
எமக்காய் இரங்கும் அன்பின் உறைகல் நீங்கள்
அப்பம்மா எனும் ஸ்தானத்திலிருந்து
அமரர் என்றநிலைக்குச் சென்றது ஏனோ?
அதை ஏற்கமுடியாமல் இன்று தவிப்பது ஏனோ?

உம் உள்ளத்தையும் இல்லத்தையும் நாடிவரும் வேளை தனில்....
பாலுக்காய் ஏங்கும் பாவை வயதினிலும்-எம்
பாசக்கைகளால் எம்மை அணைத்திட்டீர்
உறக்கம் நீங்கி விழிக்கும் வேளைதனில்
உடலைத் தூய்மைப்படுத்தி எமக்கு அலங்காரம் செய்திட்டீர்.

இனிப்புடன் புளிப்பும் உறைப்பும் கலந்திட்ட
அறுசுவை உணவைச் சுவைத்திட்ட எம் நாநரம்புகள்
இனிமேல் கிடைக்காதா? என்று
ஏங்கும் எம் சிறு கரங்கள்

ஓயாமல் எம்முடன் உரையாடுவீர்
ஓர் நாளில் பெரும் மௌனம் காத்தது முறையோ?
அகவை 80 தனிலும் அவதி எமக்குத் தரவில்லை
சோகம் தனைத் தந்திட்டீர், சுகமாய்ப் போய்ச் சேர்ந்திட்டீர்

எமக்காய் வாதிடுதல் உமக்கு இணை இனிமேல்
"அப்பாவைப் பார்த்தீடுங்கோ" என்று அயராது சொல்லிடுவீர்
தயவாய் கேட்கின்றோம் அப்பாச்சி எமக்காய்
வாருங்கள் என்று

புதுமனையில் உம்மை அணைக்க எண்ணும் வேளையிலே
புகுந்திட்டான் காலன் உம்மை அழைத்திடவே
புலம்புகின்றோம் இந்தப் புதிருக்கு விடை தெரியாமல்
புதல்வரின் புதல்வர்கள் நாங்கள்.

**பேரப்பிள்ளைகள்**

**த.கீதமி, த.பிரசன்னாத், த.வைசாலி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய



# திருவாசகம்

### திருவாசகச் சிறப்பு

தொல்லை யிரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகம் என்னுந் தேன்.

## சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!
கோகழியாண்ட குருமணிதன் தாள் வாழ்க!
ஆகம மாகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க!
ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க!

வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க!
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க!
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க!
கரங்குவிவா ருண்மகிழுங் கோன் கழல்கள் வெல்க!
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க!
ஈசனடி போற்றி எந்தையடி போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசனடி போற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடி போற்றி
சீரார் பெருந்துறை நந் தேவனடி போற்றி
ஆராத இன்பம் அருளு மலை போற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பன் யான்
கண்ணுதலான் தன் கருணை கண் காட்டவந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங் கொழியாய்
எண்ணிறந் தெல்லையிலாதானே நின்பெருஞ் சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யே யுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்து ஓங்கார மாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வென ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானனாம் விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்களேத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம் பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டி
புறந்தோல் போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ் சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங் கெடப்
பேராது நின்ற பெருங் கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீரா யுருக்கி யென் ஆருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமு மில்லானே யுள்ளானே
அன்பருக்குக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே யென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணாரமுதே உடையானே
வேற்றுவிகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம்ஐயா அரனேஒ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய் கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவிஅறுப்பானே யோவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்
(சிவபுராணம் முற்றிற்று)

- கேள்வி: திரும்பத் திரும்பப் பிறப்பதைத் தவிர்ப்பது எப்படி?

- பதில் : நெல்லை வறுத்து வயலில் விதைத்தால். அது மீண்டும் முளைப்பதில்லை அதுபோல் ஆசைகளைக் கடந்து இறைவனுடன் ஒன்றியவன் மீண்டும் பிறப்பதில்லை

பிறவிக்கடலைக் கடப்பதற்கு இறைவன்
திருவடிகளைப் பற்ற வேண்டும்.
முக்திக்குரிய எளிய வழி சரணாகதியே

- சிசு -





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபரக் கிரியைகள்

ஒருவர் இறந்த பின் அவரது நன்மை கருதி பிள்ளைகள் முதலியோரினால் செய்யப்படும் கிரியைகள் அபரக்கிரியைகள் எனப்படும். அபரம் - பிந்தியது எனப் பொருள்படும். கிரியைகள் செய்வதனால் இறந்த ஆன்மா பாவங்களினின்றும் நீங்கி, சிவத்துவம் அடையும் என்பது நம்பிக்கை. தாய் தந்தையர்க்குச் செய்ய வேண்டிய கடமைகளை அவர்கள் உயிருடன் இருக்கும் போதும் இல்லாதபோதும் தவறாது செய்தல் வேண்டும். அபரக் கிரியைகளின் பலனை சிவாகமங்களும் புராண இதிகாசங்களும் விளக்குகின்றன.

தாய் தந்தையரைப் பேணாது கடவுளை வழிபடல் பயன்தரா என்பது கௌசிகர் வரலாற்றுமூலம் அறியலாம். அவர்களை வழிபடுவதாகிய ஒரு புண்ணியமே ஒரு பிறப்புக்குப் போதியதாம்.

இல்லறத்தார்க்குரிய முக்கிய ஐவகைக் கடமைகளில் பிதிர்க்கடன் முக்கியமானதாலேயே திருவள்ளுவர் அதனை 'தென்புலத்தார்' என முதலில் கூறியுள்ளார். பிதிர்க்கடன் செய்தோர் பெரும் பேறுகளும், சித்திகளும் பெறுவர். சிவ அருளுக்கு ஆளாவர். பிதிர்க்கடன் செய்யாதோர் சமய ஆசாரந் தவறியவராவர். பிதிரர் வருந்தின் பெரும் தீமைகள் நேரும்.

## அபரக் கிரியைகள் வகை

இவை தகனக்கிரியை, அத்திசஞ்சயனம், அந்தியேட்டி, ஏகோதிட்டம், சபிண்டீகரணம், மாசியம், சிராத்தம் எனப் பல பகுதிகளை உடையன. இவைகள் உத்தரக் கிரியை சிரார்த்த கிரியை எனவும் அழைக்கப்படும். தீட்சை பெற்றோரே சைவர் என்று சொல்லுந் தகுதி பெற்றவர். தீட்சை பெற்றோருக்கு மாத்திரம் சைவக் கிரியைகள்

செய்யப்படும். உயர்ந்த நிலையிலுள்ள சிவனடியார்கள் சிவனேயாவார். அவர்களுக்குரிய உத்திர கிரியைகள் வழிபாடாக நடைபெறும். அவர்கள் சிரார்த்தம் குருபூசையாக நட்சத்திர நாளில் நடைபெறும். மற்றவர்களுக்கு பூதவுடலில் தீட்சை வைத்த பிறகு கிரியைகள் செய்யலாம். வாழ்நாள் முழுவதும் அசைவ உணவுகளை உண்ணாத சுத்த சைவர்களுக்கு பூதவுடலிலேயே அந்தியேட்டியும் செய்யலாம்.

**மரணக் கிரியைகள்:-** சுத்த சைவர்களுக்குச் செய்யும் தகனக் கிரியைகளில் மூன்று பகுதிகள் உண்டு. அவையாவன பேரிகையடித்தல், உடற்சுத்தி, ஆன்ம சுத்தி என்பனவாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பேரிகையடித்தல்:-**

ஆசாரியார் புண்ணியாகம் செய்து அந்த நீரினால் இடத்தையும் பொருளையும் சுத்தி பண்ணி, மேளத்திலே , பிரமா, விஷ்ணு, உருத்திரன் முதலிய மூர்த்திகளைப் பூசித்து மேளமடிப்பர். மேளமடிக்கும் போது சொல்லும் மந்திர வாக்கியத்தின் பொருள் இறந்த ஆன்மா நன்மையடைய வேண்டும் எனவும், பூமியிலும் மறு உலகங்களிலும் உள்ள யாவரும் வாழவும், அசுரர் போன்ற கொடியோர் அடங்கவும், சகல உயிரினத்திற்கும் ஐசுவரியம் உண்டாக வேண்டும். மிருகம், பறவை முதலிய உயிரினத்திற்கும் நன்மை உண்டாக வேண்டுமெனவும் உமாதேவியார் கட்டளைப்படி பேரிகை அடிக்கின்றேன். சிவபெருமான் அதனை இரட்சிக்க என்பதாம். (இன்று ஆசாரியார் இதனை அடிப்பதில்லை. இதற்கு அறிகுறியாக மணியை மாத்திரம் அடிக்கிறார்)

**உடற்சுத்தி:-**

சிவாச்சாரியார் பந்தலின் நடுவில் சிவகுடும்பமும், உருத்திர குடும்பமும் வைத்து அவற்றின் முன் ஓமாக்கினியை வளர்த்துச் சிவனையும் உருத்திரனையும் வழிபடுவர். எண்ணெய், பஞ்சகவ்வியம், இளநீர், மஞ்சள்நீர், சிவகும்பநீர் ஆகியவைகளில் இறந்தவர் உடலை நீராட்டிச் சுத்தி செய்து புத்தாடை புனைந்து நீறு சாத்திப் பூச்சூடி பிரணவாசனமான தர்ப்பையில் வைப்பர்.

சிவாச்சாரியார் பஞ்ச சுத்திகளையும், சகளீகரணத்தையும் செய்து அக்கினி வளர்த்து, அட்டத்திக்குத் தேவர்களையும் சிவனையும் வழிபட்டு அவர்களின் ஆசீர்வாதத்தைப் பெறுவார். குடும்பத்திலிருந்த சிவனை உடலின்மீது எழுந்தருளும்படி வேண்டி வாழிபாடு செய்வார். இருதயத்தில் ஆசனபூசை செய்து ஆன்மாவை அதில் அமைத்து, அதில் பஞ்சப்பிரமந்திரங்களைப் பதித்து அதன் இருதயத்தில் சிவனை ஆவாகனஞ் செய்து கொள்வார். பின்னர் ஆசாரியார் இறந்தவரின் நித்திய அனுட்டானக் குற்றங்களை தீர்க்க ஆகுதி செய்து அவ்வுடலுக்குந் தனக்கும் நாடி சந்தானம் செய்து, அழைக்கப்பட்ட ஆன்மாவைத் தன் இருதயத்திற்குக் கொண்டு வந்து, உருத்திரனைத் தியானித்துப் பூரணாகதியுடன் உருத்திர மூர்த்தியை அடையும் வழியில் விடுவர்.

**சுண்ணம் இடித்தலும் பந்தம் ஏற்றுதலும்**

பாவங்களை நீக்குவதற்காகச் சுண்ணம் இடிக்கப் படுகின்றது. பாவங்கள் அகன்றதும் திருவருள் உண்டாவதற்குப் பந்தம் ஏற்றப்படும். இவைகளைத் தொடர்ந்து திருமுறைகள் ஓதப் பெறும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுடலை சேர்தல்

உடலைச் சுடலைக்கு எடுத்துச் செல்லும்பொழுது அட்டத்திக்குத் தேவர்களின் ஆசியைப் பெறுவதற்காக வழியில் நெற்பொறி தூவப்படும். (சைவாசரமுள்ள ஒருவரே அதனைச் செய்யத்தக்கவராவார்) ஓமாக்கினியிலிருந்து உருத்திரனை ஆவாகித்த சிவாக்கினியும், கும்பமும் உடன் எடுத்துச் செல்லப்படும். சுடலையில் நாலுமுழ நீளம், இரண்டு முழ அகலமான இடத்தில் மஞ்சள் குங்குமம் இட்டு விறகு அடுக்கப்பட்டிருக்கும் இடம் சிதாத்தானம் என்று பெயர்பெறும். இச் சிதாத்தானத்தில் அடுக்கப்பட்ட விறகினைச் சுற்றி வந்து அதன்மீது உடலை வைத்து தற்புருட மந்திரம் சொல்லி நீரையும் அரிசியையும் இறந்தவர் வாயில் இடுவர்.

## தீயிடல் (தகனக் கிரியைகள்)

கும்பத்துடனும் சிவாக்கினியுடனும் உடலைச் சுற்றி வந்து கும்பநீரை உடலுக்குத் தெளித்துக் குடத்தை முன்பாக நிலத்திற் போட்டுச் சிவாக்கினியை விறகின்கண் இட்டு எரியச் செய்வார். கொள்ளி வைத்தவர் பின் நீர்க்கரையில் நீராடி விட்டுச் செல்வர். தீ இடும்போது "அக்கினிதேவனே பரிசுத்தமாயிருக்கின்ற உடலின் மந்திரத்தாலுண்டான பூரணாகுதியை ஏற்றுக் கொள்ளும்" என நினைத்து கொண்டே தீ இட வேண்டும்.

## அத்திசஞ்சயணம் (காற்றாடல்)

அத்திசஞ்சயணம் என்பது எரிக்கப்பட்ட உடலிலிருந்து எலும்புகளையும், சாம்பலையும் எடுத்துப் புண்ணிய நீரில் சேர்த்தலாகும். அத்தி-எலும்பு, சஞ்சயணம்-கரைத்தல், இ∴து கால், தொப்பூழ், நெஞ்சு, முகம், தலை ஆகிய இடங்களில் உள்ள எலும்புகளையும் சாம்பலுடன் எடுத்துப் பால் உள்ள பாத்திரத்தில் இட்டுக்கொண்டு புண்ணிய நீரில் சேர்த்து வழிபாடு செய்தலாம். அத்தியைப் புண்ணிய தீர்த்ததில் இடுவதினால் ஆன்மா புண்ணிய உலகம் அடையும் என்பது பொருள். சாம்பல் அள்ளுதல் என்று இன்று கூறப்படுவது இதுவேயாகும்.

## நக்னதானம் செய்தல்

இது தகனக்கிரியை முடிந்தபின் இறந்தவரின் பசி, தாகம் முதலியவற்றை நீக்கும் பொருட்டுக் குடும்பத்தாரால் ஆசாரியாருக்கு ஆடை, அரிசி முதலியவற்றைத் தானமாகக் கொடுத்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஆசௌசம்

இதைத் துடக்கு என்று கூறுவதுண்டு. இறந்த ஆத்மாவின் இரத்த உறவு தொடர்புடையோர் அந்த ஆன்மா சாந்தி பெறவேண்டிக் கிரியை செய்து பிரார்த்திக்கும் நாட்கள் ஆசௌசம் எனப்படும். இந் நாட்களில் வேறு சிந்தனைகளின்றி மங்கள நினைவுகள் தவிர்த்து, தனியாய் அவர் சார்ந்த குடும்பத்தினர் ஆ- ஆன்மா சௌ- சௌக்கியம், சேஷம்பெற ஒடுங்கி இருக்கும் நாட்கள் (இது ஜனனம், மரணம், தகனம்) என மூவகைக்கும் பொருந்தும், பூமியில் புதிதாய் ஜனனிக்கும் ஒரு ஆன்மாவின் பூமி வாழ் சௌக்கியத்திற்காகவும், ஆசௌசம் கடைப்பிடிக்கப் படுகின்றது. இது பிராமணர்களுக்கு பதினொரு நாட்களும், இசை வேளாளர்களுக்கு பதினாறு நாட்களும் மற்றையோருக்கு முப்பத்தொரு நாட்களுமாய் கடைப்பிடிக்க வேண்டியதாகும்.

### அந்தியேட்டி

இது ஆசௌசக் கடைசியில் செய்யப்படும் யாகம் எனப் பொருள்படும். அந்திய - கடைசி நாள், இட்டி - யாகம் இறந்தவரின் ஆன்ம சித்திக்காக இது நடைபெறுகின்றது. இறந்தவரின் சமய அனுட்டானத்திலுள்ள குற்றங்கள் இதனால் தீரும். புண்ணிய நீர்க் கரையில் நிகழும் குற்றங்கள் இதனால் தீரும். புண்ணிய நீர்க் கரையில் நிகழுங் கிரியை இதுவாகும். இதனால் இதனை நீர்க்கடன் என்றும் கூறுவர்.

### பாடாண பூசை(பாஷாண பூசை)

ஒரு கல்லை வைத்து இறந்தவரின் ஆன்மாவை மந்திரத்தால் அதில் வருவித்து அதற்குச் செய்யும் பூசை. இப் பூசையினாலும், இதனோடு கூடிய மற்றும் கிரியைகளினாலும் பிரிந்த ஆன்மாவானது சில பதவியை அடையத் தக்கதாகின்றது. பூசையினால் அதற்குத் திருப்தியும், மற்றவைகளால் ஈமாவின் குற்ற நீக்கமும் உண்டாம்.

### ஏகோதிஷ்டம்

இது அந்தியேட்டி செய்த அடுத்த நாளில் செய்வதாகும். இறந்த ஆத்மாவிற்கு "திருப்தி உண்டாகும் வண்ணம்" சிவ பூசை செய்யும் சிவாச்சாரியார்களைக் கொண்டு, அந்த ஆன்மாவைச் சேரும் பொருட்டு ஏகோதிஷ்டம் ஏக ஒருவரை உத்தஸ்டம் கருதுதல். அதாவது இறந்த ஒருவரைக் கருத்தில் கொண்டு செய்யப்படுவது ஏகோதிட்டம் வரிக்கும் அந்தணரைத் தமது இறந்த ஆத்மாவாகக் கருதி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்கப்படுவது சாப்பாட்டுப் பொருட்கள், உடை, செபமாலை, காலணி, குடை, பொன், பொருள் என அவர் நித்திய கருமங்களுக்கு உபயோகிக்கக் கூடியதாயும் நித்தம் அவர் பூசை செய்யும்போது போது நினைவில் அவர் ஆன்ம சாந்திக்கும் ஒரு பிரார்த்தனை செய்யக் கடவர். அதனாலேயே "ஏகோதிஷ்டம்" கொடுப்பவரும் திருப்தியாகக் கொடுக்க வேண்டும். வாங்குபவரும் அந்த ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்க வேண்டும். இருவரும் ஏக ஒருவரை உதிஸ்டம் கருதி செய்வது எனப்படும்.

### சபிண்டீகரணம்

இந்நாளிலேயே நான்கு தேவர் எனக் கூறப்படும் விசுதேவர், அப்பியாகதர், பிதுர்தேவர், நிமித்தர் என நால்வகைப்படும் தேவருக்கு கொடுக்கப்படும் பூசை உபசாரதானங்களே சபிண்டீகரணம் எனப்படும். இதற்கு அவரவர் வசதிக்கேற்ப இரண்டு அல்லது நான்கு பிராமண சிவாச்சாரியார்களுக்கு முறையான உபசாரங்களோடு உபசரித்து அவர்களின் மந்திர உச்சாடனங்களோடு திருப்திகரமான தானாதிகள் செய்து பிண்டங்களை ஒரு வடிவமாக்கி தண்ணீரில் விடுதல் அல்லது கரைத்து பசு மாட்டிற்கு வைத்தல் உத்தமமாகும். ஒவ்வொரு வர்க்கமாய் பிதுர்வாக்கம் மூன்று மாத்துரு வர்க்கம்3 நிமித்தர்1, தகப்பன் வழி, தாய்வழி, இறந்தவர் என ஏழு பிண்டம் பிடித்து வைத்து பூசித்து எல்லாவற்றையும் சேர்த்து பிதிர்தேவர் ஆக்கி விடுதல் சபிண்டீகரணம் ஆகும்.

### மாசிய சிரார்த்தம்

ஆண்டுத் திவசம் முடியும் வரை இறந்த ஆன்மாவானது இறந்த திதியில் தனது இல்லம் நாடும் என்கின்ற மரபுக்கேற்ப ஒவ்வொரு மாதமும் அந்த ஆன்மா இறந்த திதியிலும் விசேடமாக 45, 180, 360ம் நாட்களிலும் அந்தணர்களுக்குத் தானம் கொடுத்து வீட்டிலே ஆன்மாவிற்குப் பல படையல் வைத்துப் பூஜிப்பது மாசியம் எனப்படும்.

### ஆண்டுத் திவசம்

(வருட சிரார்த்தம்) இந்த சிரார்த்தமே ஆன்மாவிற்கு ஓரிட ஓய்வு தருவது. அங்குமிங்கும் இடை நடுவாய் அல்லாது, அந்தியேட்டி,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏகோதிட்டம், சபிண்டீகரணம், மாசியம் என முறையாக ஆன்மாவிற்கு மகிழ்ச்சி தரும் கிரியைகள் செய்து, ஆண்டுத் திவசத்தில் ஆன்மா மோட்சம் பெறும் என்பது ஐதீகம். எனவே இத் திவசமும் முற்கூறியவை போல் திருப்திகரமாய் செய்யப்பட வேண்டியது மிக முக்கியமாகும்.

**வருட சிரார்த்தம்**

ஒவ்வொரு வருடமும் இறந்த ஆத்மாவின் திதியில் செய்யப்படுவது இதுவாகும். இதற்குக் கணக்கு இல்லை. எம் உயிர் உள்ளவரை எம்மால் இயன்றவரை இதைத் தொடர்ந்து செய்வதால் எம்வம்சம் தழைத்தோங்கவும் எமக்கு எமது பிள்ளைகள் கிரியைகள் செய்யாவிடினும் அந்தப் பலாபலன் எமக்குக் கிடைக்கின்றது.

**மாஹாளயம்**

ஆவணி மாதத் தேய்பிறை பிரதமை முதல் புரட்டாதி மாத அமாவாசை வரையிலான பதினைந்து அல்லது பதினாறு நாட்கள் பிதுர்களுக்குரிய பிரியமான பண்டதானம், தர்ப்பணம் முதலியன செய்யும் காலமே "மாஹாளயம்" எனப்படுகின்றது.

தட்சணத்தில் சூர்யன் தெற்கு நோக்கிச் சஞ்சரிக்கும் காலம் அதன் நடுப்பாகம் புரட்டாதி மாதம், அதாவது பூமி நேரே நிற்கும் காலமும் சந்திரன் தென் பகுதிக்கு நேராகவும் நிற்கும் காலமாக அமைவதாலும் இக் காலம் பிதுர்களுக்குப் பிரியமான விசேடமான காலமாக அமைகின்றது. சில வேளைகளில் வருஷ சிரார்த்தம் நாம் செய்ய தவறியிருப்பின் செய்ய முடியாத நிலைமைகள் அமைந்து விடினும் அதை இந்த மஹாளய பட்ச நாளில் செய்து கொள்ளலாம்.

**அமாவாசை விரதம்**

இது ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி திதி முடிந்த 15ம் நாளில் வருகிறது. இந்த நாளில் "தாமகு" தந்தை பாட்டன் வழயினருக்கும் தர்ப்பணம் செய்து விரத அனுட்டானம் செய்வது மரபு. இந்த அமாவசை மிகவும் சிறப்பு வாய்ந்தது. இந் நாளில் தந்தை வழியினர் சிரார்த்தங்கள் செய்யத் தவறியோர் இந் நாளில் செய்யலாம். பிதுர்களுக்குரிய திசையாகிய தெற்குத்திசை பக்கமாய் சூரிய பகவான் உதயமாகும் காலமும் சந்திரனின் ஆட்சி வீடான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடகராசியும் சூரியன் சஞ்சரிக்கும் காலமும் கொண்ட இந் நாள் பிதுர்களின் பிரியநாள். எனவே இந்த ஆடிஅமாவசை புனிதத்துவமும் மகிமையும் நிறைந்த நாளாய் மிளிர்கிறது.

## பூரண விரதம்

இவ் விரதம் ஒவ்வொரு மாதமும் அமாவாசைத் திதி முடிந்த 15ம் நாளில் வருவது. இந் நாளில் தாயாருக்கும் தாய்வழி உறவினருக்கும் விரதம் இருந்து தர்ப்பணம் செய்து அன்னதானம் செய்வது உத்தமம். பௌர்ணமி விரதங்களிலே மிகவும் சிறப்பு வாய்ந்த "சித்ரா பௌர்ணமி" சூரியன் தனது உச்சம் பெற்ற வீடாகிய மேஷராசியில் சஞ்சரிக்கும் காலம் அதே நேரம் மாதுரு காரகன் சந்திரன் 7ம் இடம் சஞ்சரிக்கும் காலம் சூரியன் பிதாகிரகம் சந்திரன் மாதா கிரகம் என்பது ஜோதிட நூல்கள் கூறும் விதி. இந்த இரு கிரகங்களின் சேர்க்கைப் பார்வை பெறும் நாட்கள் பிதுர்களின் பிரிய நாளாகின்றன. எனவேதான் ஆடிஅமாவசை சித்ரா பௌர்ணமி சிறப்புப் பொருந்திய சிரார்த்த தினங்களாகப் பேணப்படுகின்றன.

➢ கேள்வி: கடவுளின் கருணையைப் பெறுவதற்கு உரிய வழி?

➢ பதில் : நாம் மற்றவர்கள் மீது கருணை காட்டுவது தான். நாம் இறைவனின் கருணையைப் பெறுவதற்குரிய வழியாகும் . நாம் பிறரிடம் அன்பு காட்டுவது தான் நாம் இறைவனின் அன்பைப் பெறுவதற்குரிய வழியாகும். நாம் பிறரிடம் கருணையுடன் நடந்து கொண்டால்தான் இறைவன் நம்மீது கருணையுடன் நடந்து கொ

- சிசு -





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலம்பல்

## நினைவுவரிகள்



### பாசக் குன்றே.....

அன்பான அம்மாவே ஆசைக்கு இனியவரே
பண்பான வடிவமே பாசக் குன்றே தாயே
இன்பமாய் பேசியே இனிய கதைசொன்னவரே
துன்பத்தில் தோய்ந்தோமே துயரில் கலங்கினோமே!

மாசற்ற தாயே எமை வளமாக்கியவரே
நேசமறந்து நீரோ போனதும் ஏனோ?
பாசத்தில் தோய்ந்தேனே சோகத்தில்
பேசவே முடியாது விம்முகின்றேன் தாயே!

- மூத்தமகன்
  மகேந்திரநாதன்

### நாசியில் கலந்து ...........

ஏசியே அறியாது தாலாட்டி வளர்த்தவரே
பேசியே எம்மை மனிதம் விதைத்தவரே
நாசியில் கலந்து நற்கல்வி தந்தவரே
யோசிக்கவே முடியாது தவிக்கின்றேனே தாயே!

நேயத்தை விதைத்து நல்லுணர்வு ஊட்டி
தாயன்பு தந்து தரணியில் சிறந்தவரே
மாய உலகத்தில் வாழவழி சொன்னவரே
காயமாறாது உம்பிரிவு எந்நாளும் பலவே!

- மூத்தமகள்
  இந்திராணி

### கருணை தந்தவரே ......

இளையவள் என்றோ என் மேல் பாசமாய்
களையாக இருந்து கருனை தந்தவரே
சுளையாக அன்பை கொட்டித் தீர்த்தவரே
மழலையாக அழுகின்றேன் வந்து பாருமன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகையாடை அணி செய்து என்னை
வகை வகையாக பார்த்து மகிழ்ந்தீரே
பகையில்லா உலகில் பண்பாய் வாழவே
தொகையாய் நல்வார்த்தை சொன்னவரே

• இளையமகள்
தவமலர்

## சின்னவன் நானென .......

சின்னமகனென சீராட்டி வளர்த்து அனைத்து
நன்னெறி சொல்லி நயமான கதைகள் பேசி
கண்மணி போல காத்த அருள் தாயே
எண்ணியே அழுகின்றேன் ஏங்கி தவிக்கின்றேனே.

சோகம் கரையாது நெஞ்சு படபடக்க
தாகமாய் நின்நினைவு வாட்டுதே அம்மா
போக்கிட நீரும் வரவும் மாட்டாயோ
ஏக்கமாய் கேட்கிறேன் ஆசை அம்மாவே!

• இளையமகன்
தவலிங்கம்

## நாமிங்கு.......

மாமியென அழைத்தாள் வடிவாய் சிரிப்பீரே
சாமியுனை அழைத்தானே நீரும் போனீரோ
நாமிங்கு அழுவதை கேளாதும் நீரோ
நிமிர்ந்து பார்ப்பதும் ஏனோ மாமி சொல்லும் ......

• மருமகன்மார்
மகாலிங்கம் , வரதராஜா

## மலரிலும்மென்மையான....

வாழவந்தவர்கள் நாமென்று புன்னகையால் அரவணைத்து
சீலமுடன் வாழ வாழ்வு வழிபல சொன்னவரே
மலர்ச்சியான முகத்தோடு நேர்மை வழி காட்டியவரே
மலரினும் மென்மையான வானினும் தூய்மையானவரே

• மருமகள்மார்
செல்வமணி(தங்கா) , கமலேஸ்வரி (ராசாத்தி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சோகமாய் போனதேனோ.....**

முகம் பார்த்து பேசாமல் நிலம் பார்த்தே
அகம் பார்த்து பேசினோமே இதயத்தால்
ஏகமாய் நிறைந்த அருளான தாயே நீரும்
சோகமாய் போனதேனோ தெரியாது தவிக்கின்றேனே

• மைத்துனன்

**அச்சத்தை தாண்டி........**

மச்சாளென்றால் முகத்தால் வினா தொடுப்பீர்
இச்சையாய் எனை அரவணைத்து மகிழ்ந்திரே
பச்சை உளமதால் களவின்றி பேசினீரே
அச்சத்தை தான்டி உள்ளத்தை தொட்டவரே

• மைத்துனி

**இடியும் விழுந்ததே........**

மடிமேல் வளர்த்தி தாலாட்டு பாடியெமை
வடிவாய் வளர்த்து மூக்குவாய் பிடித்தவரே
படிக்க பள்ளிக்கு கூட்டியும் சென்றவரே
இடியும் விழுந்ததோ நீரும் எங்கோ கூறும்

• பேரப்பிள்ளைகள்

**ஏங்கியே..**

சகோதர மென்றால் உம்மை விட்டார் யாரும் உளர்
பாகோடு பழகினோம் பண்பாய் வளந்தோமே
ஏனிந்த சோதனை எமக்கும் வந்ததோ
ஏங்கியே தவிக்கின்றோம் பாசமிகு சகோதரியே

• உடன்பிறவாச்
சகோதர சகோதரிகள்

**உளவிலதே**

தாயின் பிரிவுதனைத் தாங்கார் துறவியரும்
ஆயினும் துயரம் அலவிலதே! – தீயும்
பரி வோடெரிகின்ற பாசம் மறவாமல்
திரிவோம் எம் நாளும் சில

• உற்றார் உறவினர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

<u>பிறப்பு</u>

1932 - 10 - 04



<u>இறப்பு</u>

2012 - 05 - 07

## அமரர். தர்மலிங்கம் கனகம்மா

யாழ்ப்பாணம் பொலிகண்டியை பிறப்பிடமாகவும், இல. 291,பிரதான வீதி,
திருகோணமலையை வதிவிடமாகவும் கொண்ட
திருமதி. தர்மலிங்கம் கனகம்மா 07.05.2012 அன்று சிவபாதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தர்மலிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற முருகேசு, ராசம்மாவின் அன்பு மகளும் மகேந்திரநாதன்(UK), இந்திராணி (தி/ஸ்ரீ கோணலிங்கம் மகாவித்தியாலய ஆசிரியை) தவமலர் (UK), தவலிங்கம் (வைசாலி ஆட்டோ shop உரிமையாளர்) ஆகியோரின் அன்புத் தாயாரும், செல்வமணி, அமரர் மகாலிங்கம் (விக்னேஸ்வரா ஸ்ரோர்ஸ் உரிமையாளர்) வரதராஜா (UK), கமலேஸ்வரி (தி/விக்னேஸ்வரா மகா வித்தியாலய ஆசிரியை) ஆகியோரின் அன்பு மாமியாரும், அமரர் மார்க்கண்டு ஆகியோரின் அன்புச் சகோதரியும், சங்கீதா மகேந்திரரவி, (UK)
சர்மிளா, நந்தரூபன் (பிரான்ஸ்), சஞ்ஜீவ்நாத் (அவுஸ்ரேலியா), சித்திரா, தனுசா பிரசாத்(UK), நிசாந்தன் , அஞ்சலிக்கா (பிரான்ஸ்), மயூரா குலராஜகரன் (UK), மைதிலி சுதர்சன், நிவேதிகா(UK), கீதமி, பிரசன்னாத், வைசாலி ஆகியோரின் அன்பு பேத்தியும், டினுஷிதன்(பிரான்ஸ்), (பிரான்ஸ்), அஷ்வினா (பிரான்ஸ்), கீர்த்தனன் (UK) ஹரிராம் (UK), லஸ்வினி (UK) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

**அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து
செவ்வாய்க்கிழமை (08.05.2012) மாலை 4.30
மணியளவில் இறுதிக்கிரியைக்காக திருகோணமலை
இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இத் தகவலை உற்றார் உறவினர் நண்பர்கள்
அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்**

இல. 291, பிரதான வீதி,
திருகோணமலை.
T.P.026 2224249.

தகவல்
குடும்பத்தினர்

சரவணா ரேடர்ஸ் 026-2227079

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்த

**அமரர்.கனகம்மா தர்மலிங்கம்**

அவர்களின் பிரிவின் போது விரைந்து வந்து

உதவிய உற்றார்,உறவினர்,நண்பர்கள்

நேரில் வந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும்

வெளிநாடுகளிலிருந்து தொலைபேசி மூலம்

இரங்கற் செய்திகளை அனுப்பியவர்களுக்கும்.

இவற்றுடன் கிரியை நடத்திய அந்தணருக்கும்

இறுதிக் கிரியையில் கலந்து கொண்டோருக்கும்

எல்லாம் வல்ல சமாது தங்க விநாயகர் அருள்

புரிய வேண்டு மென்று பிரார்த்தனை செய்து

நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**குடும்பத்தினர்**

**291, பிரதான வீதி**

**திருக்கோணமலை.**


T.P: 0262224249


* **தொகுப்பாசிரியர்** : **சுந்தா (0756901316)**
* **அச்சு** : **அஸ்ரா பிறின்டஸ்,**

**திருகோணமலை**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குடும்ப விருட்சம்
# (வம்சாவழி)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org